**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | தமிழ் - I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

❖ பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) பூவொரு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

(i) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.
(ii) இச் செய்யுளில் முதல், கரு, உரிப்பொருட்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.
(iii) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உள்ளுரை உவமத்தை இனங்கண்டு, அதனூடாக உணர்த்தப்படும் செய்தியை விளக்குக.

ஆ) கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர் தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ii) குகனது ஆளுமையும் வீரமும் புலப்படுமாற்றை விளக்குக.
(iii) 'உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவன்' எனும் அடியினூடாக புலப்படுத்தப்படும் விடயம் யாது? (12 + 12 = 24 புள்ளிகள்)

2) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
அல்லது
'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) உழுது வாழ்வோன் உணவின்றி
உடலம் சோர்ந்து துடிக்கின்றான்
அழுது வடிந்த கண்ணீரை
அருந்தி நெஞ்சம் கவல்கின்றான்.
கொழுத்த செல்வன் உழைப்பவனின்
குருதி குடித்து மகிழ்கின்றான்

agaram.lk

பழுத்த அவனின் பெருவயிறு
பானை யாகச் சிரிக்கின்றது.

ஆடை நெய்வோன் துண்டேனும்
அணிந்து கொள்ள வழியின்றிக்
கோடையோடும் குளிரோடும்
கோரச் சண்டை தொடுக்கின்றான்
மூடை வயிற்றுப் பெருஞ்செல்வன்
மூக்கு முட்ட உண்ட பின்னர்
கேடில் பட்டுத் துணியாலே
கையைத் துடைத்து மகிழ்கின்றான்.

சேற்று மண்ணில் காலூன்றிச்
செய்ய உண்டி பல செய்த
ஆற்றல் மிகுந்த தொழிலாளி
ஆன்மா நொந்து தவிக்கின்றான்
போற்ற அவனை யாருமில்லை
புரிய எவனும் இங்கில்லை
வேற்று மனிதன் அவனுயிரை
விழுங்கி ஏப்பம் விடுகின்றான்.

சோடை யுற்ற சொறிநாயாச்
சோம்பி நின்றது போதுமடா
பாடை ஏறிச் செல்லு முன்னே
பானை வயிற்றுச் சீமானை
ஆடை இன்றி அணியின்றி
அருந்தி மகிழ உணவின்றி
காடாக் கினியில் தள்ளி விடக்
கரங்கள் கோர்த்தே எழுங்களடா.

நோக்கம் இல்லாச் சீமான்கள்
நொந்து படையா வாழ்வுக்கோர்
ஆக்கம் செய்த கரங்களினால்
அழிவு செய்ய எழுங்களடா
தாக்க முற்று இதயங்கள்
தீயாய் ஓங்கி அவர் வாழ்வைத்
தாக்கி மண்ணில் சாம்பலெனத்
தள்ளி விட்டே மலரட்டும்.

கல்லை உடைத்து நெடுஞ்சாலை
கண்ட கைகள் சீமானின்
பல்லை உடைத்து வளர்கின்ற
பயிருக்கு எருவாய்ப் போடட்டும்
நெல்லைக் கொண்ட அவர் மனைய
நெருப்பில் இட்டுக் கொழுத்தட்டும்
எல்லாம் உமதே நீரே தாம்
இந்தப் புவியின் எஜமானர்

(i) இச்செய்யுளில் இடம் பெறும் தொழிலாளர் யாவர்?

(ii) முதலாளித்துவத்தின் உழைப்பும் சுரண்டலும் உல்லாச வாழ்வும் இச்செய்யுளில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது?

agaram.lk

(iii) முதலாளி வர்க்கத்தின்மீதான வெறுப்புணர்வை கவிஞர் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

(iv) ‘எல்லாம் உமதே நீரேதான் இந்தப் புவியின் எஜமானர்’ எனும் வரிகளினூடாக கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்தைத் தெளிவுபடுத்துக.

(4 x 4 = 16 புள்ளிகள்)

அல்லது

ஆ) தமிழ் பழமை வாய்ந்தது. தொண்டர் நாதனைத் தூதிடைப் போக்கியது. என்றின்னன பழங்கதைகளை நமக்குள்ளே பேசிக் கொள்வதில் எய்துவதற்குரிய பிரயோசனம் யாதுமில்லை. நாற்றிசை மக்களும் நமது நாகரிகத்துக்கு ஏற்றமுரைக்கு வேண்டுமென நாமெண்ணுவோமாயின் தமிழ்நூல் பொதிந்த கருவூலத்தினுள்ளே யமைத்துக் கிடக்கும் நன்மணிகளை எடுத்து அவற்றின் மதிப்பை நாம் பிறருக்கு உணர்த்துதல் வேண்டும். பிறநாட்டாரிடத்திலுள்ள அரிய பெரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழி பெயர்த்துத் தமிழுக்கு உரிமையாக்க வேண்டும். அனைவருமெளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க இலகுவாகிய தமிழ்நடையில் உயிர்க்குறுதி பயக்கும் உயர்ந்த சாத்திரங்களை எழுதுவித்தல் வேண்டும் தேகத்துக்கு வலிமையும் மனதுக்கு உறுதியுந் தரத்தக்க எண்ணங்கள் தமிழ் நாடெங்கும் பரப்புவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல்நிலை, பொருளதார நிலை, சமூகவாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்படுத்திக் கொள்ள முயல்வாராயின் முதலிலே தாம் எய்தவேண்டுமென்றெண்ணுகின்ற நிலையை அவர்தம் மனிதிடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளினுடைய கருத்தினை நுனித்து நோக்கி அமைக்குந் தரத்து இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும் பல தேசத் தொடர்புகளுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படியும் படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்க வல்ல உண்மைக் கவியாவான். இத்தகைய ஒரு கவியை தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப் பயனேயாகும். கவியரசராகிய சுப்பிரமணியம் பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பல வருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்கும் புத்துயிர் அளித்து வருகின்றது. இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலக மாதாவாகிய பராசக்தியை வேண்டிக் கொள்வோமாக.

வட மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய நூல்கள் பல விருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை என்கின்ற வேறுவகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல்நாட்டாசிரியர்கள், தம்மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண’டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழிபெயர்ப்பும் உரையும் ஆங்கிலம் முதலிய மேல்நாட்டு மொழிகளிலுண்டு. தமிழிலோ வென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மாத்திரமே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

(i) ‘பழங்கதைகள் பேசுவதால் பயின்ல்லை புதிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்’ என்ற கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ்மொழிக்கு ஆற்றவேண்டிய தொண்டுகளாக ஆசிரியர் முன்வைத்துள்ளவற்றைத் தெளிவு படுத்துக.

(ii) பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு எத்தகையது?

(iii) வட மொழியிலிருந்து தமிழுக்கான மொழிபெயர்ப்புக்கு குறித்த, தனது ஆதங்கத்தினைக் கட்டுரையாசிரியர்கள் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(4 x 4 =16 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

3) ‘தெரிந்து செயல்வகை’ எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   அ) செய்யத்தகு வினையும் அது செய்யுமாறும்.
   ஆ) ஒழியத்தகு வினையும் ஒழியாவழிப்படும் இழுக்கும்.
   இ) செய்வன செய்து ஒழிவன ஒழிக.
   ஈ) செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையும் (20 புள்ளிகள்)

4) குகப்படத்தில் பரதனது சேனைகள் கங்கையைக் கடந்தது முதல் பரதன் நாவாயில் ஏறியது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனற்றைத் தெளிவுபடுத்துக.
   அ) யானை, தேர், குதிரைப்படைகள் பற்றிய சித்திரிப்பு.
   ஆ) நாவாயில் சென்ற மகளிர் பற்றிய தோற்ற வர்ணனை.
   இ) நாவாய்கள் சென்று மீளும் காட்சிப் புனைவு.
   ஈ) உவமையணியைக் கையாள்வதில் வெளிப்படும் கம்பரது கவியாற்றல். (20 புள்ளிகள்)

5) தேம்பாவணி ‘காட்சிப்படலத்தில’ அன்னை மரியாளுக்கும் சாந்தி என்னும் இடையர் குலப் பெண்ணுக்கும் இடையிலான உரையாடலை அடிப்படையாகக் கொண்டு,
   அ) சாந்தியின் ஐயங்கள்.
   ஆ) மரியாளின் மறுமொழி
   இ) இறைவனது பெருமைகள்
   ஈ) உவமை அணிச் சிறப்பு
   என்பன வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

6) பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் ‘இலக்கிய விமர்சனம்’ என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   அ) இலக்கிய விமர்சனம் என்று பொதுவாகக் கருதப்படுபவற்றை மறுதலிப்பதற்காக ஆசிரியர் குறிப்பிடும் இலக்கிய ஆதாரங்களை விளக்குக.
   ஆ) இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? அது எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துக.
   இ) ஆசிரியர் விவரிக்கும் இலக்கிய விமர்சன வகைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.
   ஈ) பழைய இலக்கண ஆசிரியர்களின் கொள்கையில் காணப்படும் மூன்று பிரதான அம்சங்களாக ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்? (20 புள்ளிகள்)

zigaram.lk

7) கு. அழகிரிசாமியின் ‘தியாகம்’ என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,
   அ) கதிரேசன் செட்டியாரின் கண்டியான சுபாவமும் வேலையாட்களின் நலன் மீதான அக்கறையும் நுட்பமாக வெளிப்படுத்தபட்டிருக்கும் திறன்.
   ஆ) ஷண்முகம்பிள்ளை என்ற பாத்திர உருவாக்கம் பற்றிய மதிப்பீடு.
   இ) கதிரேசன் செட்டியாரின் தியாக உணர்வு வெளிப்படும் சந்தர்ப்பம்.
   என்பன இக்கதையில் வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
   அ) ஊர்காண் காதையில் கோவலனுக்கு கவுந்தியடிகள் கூறிய அறிவுரைகள்.
   ஆ) ‘அமலனாதி பிரான்’ எனும் பதிகத்தில் வெளிப்படும் புராண இதிகாசச் செய்திகள்.
   இ) காரண மாலையில் விபரிக்கப்பட்டிருக்கும் மக்கா நகரின் இயற்கை எழில்.
   ஈ) இரு துயரங்கள் நாடகத்தில் டாக்டர் கந்தப்பு, மனோகரன் ஆகிய பாத்திரங்களின் இயல்பு பற்றிய சித்திரிப்பு.
   உ) ஒரு வெண் மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது எனும் நாவலின் ஊடாக வெளியிடும் ஆலங்கேணிக் கிராமத்தின் பண்பாட்டுப் பதிவுகள். (20 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | தமிழ் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் அரை உயிர் எழுத்துக்கள்.
   1. ய்,வ் 2. இ,உ 3. க்,ச் 4. ப்,ம் 5. அ,ஔ ( )

2. ‘ஞாயிறு வரவு கண்டு தாமரை களித்து நின்று மலர்ந்ததம்மா’ எனும் அடிகளில் இடம்பெறும் உயிர்தொடர் குற்றியலுகரம்.
   1. ஞாயிறு 2. வரவு 3. கண்டு 4. களித்து 5. நின்று ( )

3. வேற்றுநிலை மெய்மயக்கமாக இடம் பெற்றுள்ள சொல்.
   1. கன்னி 2. விண்ணகம் 3. நட்பு 4. முற்றம் 5. வித்தை ( )

4. உகரம் கெட்டுப் புரணந்த சொல்
   1. மரவேர் 2. பூனையை 3. இருமல் 4. அவருக்கு 5. பருப்பு ( )

5. மாடு கன்று, மாட்டுக்கன்று என்பன இடம்பெற்றுள்ள புணர்ச்சி விதிமுறை – முறையே,
   1. விகாரப் புணர்ச்சி, இயல்புப் புணர்ச்சி
   2. மெய்யீற்றுப் புணர்ச்சி, உயிரீற்றுப் புணர்ச்சி
   3. உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி
   4. வேற்றுமைப் புணர்ச்சி, அலவழிப் புணர்ச்சி
   5. அலவழிப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி ( )

6. பகாப்பதமாக அமையக் கூடிய சொல்.
   1. பப்படம் 2. அவர்கள் 3. மீன்கள் 4. கண்டான் 5. கிணற்றில் ( )

7. ‘ய்’ என்னும் சந்தி இடம் பெற்றுள்ள சொல்.
   1. நாயை 2. தீயை 3. காயை 4. மாயை 5. பேயை ( )

8. பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம்பெறாத சொல்.
   1. அணைத்துக் கொண்டான் 2. மலைக்குகைகள்
   3. இடமாற்றங்கள் 4. எழுதுகின்றார்கள்
   5. கவிச்சக்கரவர்த்திகள் ( )

9. உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயரைக் கொண்டமைந்த வாக்கியம்.
   1. நாங்கள் இன்றிரவு ஆலயம் செல்வோம்.
   2. எங்களுக்கும் காலம் வரும் காலம் வந்தால் வாழ்வு வரும்.
   3. உங்கள் பிள்ளைகளைக் கவனமாகப் படிக்க வையுங்கள்.
   4. இவர்கள் நம்முடைய உறவினர்கள் என்பதை மறவாதீர்கள்.
   5. எவரும் எங்களைக் கேள்வி கேட்க முடியாது. ( )

agaram.lk

10. வினாப் பெயர் அடியில் பிறந்த மாற்றுப் பெயர்.
   1. வானமாவது    2. உவமையாவது    3. யாரையாவது
   4. அவனையாவது    5. கண்ணாவது    (    )

11. பூமியில் உண்டான வெடிப்பில் நுழைந்து சீதாதேவி மறைந்து போனாள் - இதில் வெடிப்பு என்பது,
   1. கூட்டுப் பெயர்    2. பண்புப் பெயர்    3. ஆக்கப் பெயர்
   4. வினையாலணையும் பெயர்    5. துணைப்பெயர்    (    )

12. 'இரு' என்பது துணை வினையாக அமைந்த வாக்கியம்.
   1. இராமன் அரியாசனத்தில் வீற்றிருந்தான்.
   2. நேற்று இருந்தார் இன்று இல்லை.
   3. கல்லாய் இருந்தேன் சிலையாய்ச் செதுக்கினாய்.
   4. அவள் தூரமாக விலகிப் போயிருந்தாள்.
   5. மரத்தின் மடியில் மலராய் இருந்தேன்.    (    )

13. 'வா' என்ற வினையின் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.
   1. வந்து    2. வர    3. வரவு    4. வந்தும்    5. வரும்    (    )

14. பின்வருவனவற்றுள் வினைத்தொகையாகவும் உவமைத் தொகையாகவும் அமைந்த சொல்.
   1. மலர் விழி    2. கயல் விழி    3. தேன் மொழி
   4. கறி சோறு    5. ஆடு கால்    (    )

15. பாரதி நிலவைப் பாடினான் - இது ஒரு.
   1. கூட்டு வாக்கியம்    2. தனிவாக்கியம்    3. கலப்பு வாக்கியம்
   4. கூட்டுக் கலப்பு வாக்கியம்    5. துணை வாக்கியம்    (    )

16. 'அழகான புள்ளிமானே'... என்பதில் உள்ள அழகான என்பது,
   1. தனிப் பெயரடை    2. ஆக்கப் பெயரடை    3. தனி வினையடை
   4. கூட்டு வினையடை    5. அடுக்குப் பெயரடை    (    )

17. இராவணனின் இரண்டு கண்களும் வெஞ்சினத்தால் சிவந்தது - இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வழு.
   1. திணை வழு    2. பால்வழு    3. எண்வழு    4. இடவழு    5. காலவழு    (    )

18. அகர வரிசைப்படி அமைந்திராத சொற்தொகுதி.
   1. பஞ்சமம், மேதை, யவனர், யுகம், வண்டு.
   2. அரியாசனம், எருக்கலை, சப்பாத்திமுள், தருமர், வைகறை
   3. இறைவன், சங்கமம், நாகரிகம், தேவதை, யாசகம்.
   4. ஞமலி, சிந்தனை, சீர்திருத்தம், புயற்காற்று, மோகம்.
   5. சிறைச்சாலை, சினம், நீராடுதுறை, மேன்மை, விழுதுகள்    (    )

19. பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் - இதில் இடம்பெற்றுள்ள உம்.
   1. எச்ச உம்மை    2. தெரிநிலை உம்மை    3. எண்ணும்மை
   4. எதிர்மறை உம்மை    5. ஐயவும்மை    (    )

20. பின்வருவனவற்றுள் காலத் தொடர்ச்சியை உணர்த்தி நிற்கும் வினையடையைக் கொண்ட வாக்கியம்.
   1. அவன் இனிக்க இனிக்க பேசுவான்.
   2. அவன் மனங்களிக்கப் பேசுவான்.
   3. அவன் இதமாகப் பேசுவான்.
   4. அவன் கொஞ்சமாகப் பேசுவான்.
   5. அவன் இருந்தாள் போல் இருந்து பேசுவான்.    (    )

(20 புள்ளிகள்)

agaram.lk

2) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

குஞ்சு பொரிக்க வைக்கப்படும் முட்டையில் படிப்படியாக ஏற்படும் மாற்றம் நம் பார்வைக்குப் புலனாவதில்லையானாலும் இறுதியில் மாற்றங்களினாலான ஸ்தூல வடிவத்தை நாம் பார்த்து உணரலாம். முதல் விநாடியின் மாற்றத்தைப் புறக்கணித்து விட்டு மறு விநாடியில் மாற்றம் ஏற்படுவதில்லை. ஒன்றையொன்று உள்ளடக்கி உள்ளடக்கியே ஸ்தூல வடிவமான பெரு மாற்றத்தக்கு வழி பிறக்கிறது. பிரபஞ்ச வளர்ச்சியின் இந்தச் சரித்திரப் போக்குக்கு, இலக்கிய வளர்ச்சியின் போக்கும் எந்த வகையிலும் மாறுபட்டதல்ல.

பல்வேறு முரண்பாடுகளின் காரணமாக நலிந்து போய்க் கிடக்கும் மக்களுக்கு உத்தரவாதமான இன்ப வாழ்வளிக்கும் பணியில் தன்மையும் இணைத்துக் கொண்டு செயலாற்றுவதன் மூலம்தான் ஒரு எழுத்தாளன் தன்னுடைய பிறந்த நாட்டுக்குத் தன் பங்கைச் செலுத்திவனாவான். ஒழுக்கம், பண்பு போன்ற வரம்புகளால் புறக்கணிக்கப்பட்டு, வறுமையிலும் துன்பத்திலும் வாழ்க்கை நடத்தும் கோடானு கோடி மக்களின் சுக துக்கங்களைப் புரிந்து கொண்டு, அவர்களின் போராட்ட மயமான வாழ்வில் மின்னல் போல் தோன்றி மறையும் மனித உணர்வுகளுக்கு முழு வடிவங் கொடுக்கும் அதே வேளையில், அவர்களை இந்த நிலைமைக்குத் தள்ளிவிட்ட சுகபோக வர்க்கத்தினரின் கோரத்திரையைக் கிழித்தெரிந்து, அம்பலப்படுத்துவதும் அந்த மனச்சாட்சியுள்ள எழுத்தாளனின் கடமையாகும்.

எழுத்தாளன் என்பவன் ஒரு நடுநிலைமையாளன் என்பது ஒரு புத்தி பூர்வமான கருத்தல்ல. சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும் சுகபோகிக்கும் நித்திய தரித்திரனுக்கும் இடையில் நின்று ஞானோபதேசம் செய்வது சுலபம். பெயரும் புகழும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பலன், நீதி எப்படிச் சாகாவரம் பெற்று நிலைக்க வேண்டுமோ, அநீதியும் அப்படியே சாகாவரம் பெறச் செய்வதுதானாகும்.

(13 புள்ளிகள்)

ஆ) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எங்களுடைய அனுபவம் புலவனுடைய அனுபவத்தைப் போல ஆழம் அல்லது தெளிவு உள்ளதாக இருப்பதில்லை. அதனாலும் நாம் அதனைத் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. இத்தகைய நிலையிலிருந்தும் நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் நாட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆகவே வெளியில் நீந்திக் கொண்டு செல்லும் தண்மதியைக் காணும் போதெல்லாம் எம்முடைய உள்ளத்தில் ஓர் இன்ப உணர்ச்சி உதிக்கின்றது எனினும் அக்காட்சியின் கண் ஒரு புலவனுடைய உள்ளம் அமுந்துவது போல் எம்முடைய உள்ளம் அழுந்துவதில்லை. எம்மினும் பார்க்க பன்மடங்கு இன்பத்தைப் புலவன் அடைகின்றான். அது மட்டுமன்று தான் பெற்ற அனுபவத்தைக் கவிதையுருவத்தில் எமக்குத் தருகின்றான். ஆகவே நாம் அவனுடைய உதவியை நாடி, அவன் உதவிய கவிதையைப் படித்து, ஒரு தெளிந்த அனுபவத்தைப் பெற்று இன்புறுகின்றோம். ஆகவே கற்பனைத் திறனிலும் மொழியாற்றலிலும் புலவன் எம்மிலும் பன்மடங்கு சிறந்து விளங்குவதால் அவனாற் கவிதை புனைய முடிகின்றது. எம்மால் முடிகிறதில்லை. இதுதான் எமக்கும் புலவனுக்குமிடையேயுள்ள வித்தியாசம்.

ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க வேண்டுமாயின் முதலில் அக்கவிதைக்கு ஏற்று மனோநிலையினை நாம் எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அது மட்டும் போதாது. அதைப் பலமுறை படித்தல் வேண்டும். உயர்ந்த கவிதைகளை ஒரு முறை படித்து அனுபவிக்க முடியாது. பன்முறை படித்தால்தான் அது குறிக்கும் பொருள், உணர்ச்சி, அனுபவம் என்பவற்றை நாம் கிரகித்துக் கொள்ள முடியும். ஒரு முறை படித்தவுடனே அது குறிப்பன யாவற்றையும் அறிந்து கொள்ள முடியுமாயின், அது சிறந்த கவிதையன்று என்பதை அனுமானித்துக் கொள்ளலாம். கவிதையைப் படிக்கும் போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் எமக்கு இருத்தல் வேண்டும் அதன் கண் உள்ளத்தைத் தோய விடுதல் வேண்டும். அந்த நிலையிலே தான் புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அதில் நாம் அழுந்துவதால் சொலற்கரிய இன்பத்தைப் பெறுகிறோம். அமர வாழ்வை அடைகின்றோம். இது தான் நாம் கவிதையாற் பெறும் பயன் வேறில்லை.

(i) புலவனால் எப்படிக் கவிதை புனைய முடிகின்றது?

(ii) நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று இன்பம் அடைய புலவனுடைய உதவியை நாட வேண்டும் என்பதை இக்கட்டுரையாசிரியர் எவ்வாறு விளங்குகின்றார்?

(iii) ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க என்ன செய்ய வேண்டும்?

(iv) கவிதையாற் பெறும் பயன் யாது? (12 புள்ளிகள்)

agaram.lk

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ) புலம் பெயர் நாடுகளில் தமிழ் மொழிக்கல்வி.
ஆ) வெகுசன ஊடகங்களில் பெண்கள்.
இ) நாடக இலக்கிய வளர்ச்சியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் பங்களிப்பு.
ஈ) தொலைக்காட்சி நாடகங்களும் தமிழர் சமூகமும்.
உ) அறம் செய்ய விரும்பு. *(25 புள்ளிகள்)*

## பகுதி II

4) அ) சங்கமருவிய காலத்தெழுந்த பக்தி இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் முக்கிய பண்புகளை எடுத்துக் காட்டுக.
ஆ) சங்கமருவிய கால பக்தி இலக்கிய வளர்ச்சி பல்லவர் கால பக்தி இலக்கிய வளர்ச்சியில் ஏற்படுத்திய செல்வாக்கினை ஆராய்க.
இ) பல்லவர் காலத்தின் பின் எழுந்த சமய இலக்கிய வளர்ச்சி குறித்து சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

5) அ) விஜய நகர – நாயக்கர் காலத்தெழுந்த சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) சோழர் காலத்தில் மன்னர் புகழ்பாடுவனவாக அமைந்த பிரபந்தங்கள் தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.
இ) மேற்குறித்த பிரபந்தங்கள் விஜய நகர – நாயக்கர் காலப்பகுதியில் கையாளப்பட்டிருக்குமாற்றை விளக்குக. *(15 புள்ளிகள்)*

6) இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துக்கு முன்னெழுந்த
அ) தூது இலக்கியங்கள்
ஆ) அந்தாதி இலக்கியங்கள்
என்பவற்றை விளக்குவதோடு
ஈ) ஆங்கிலேயர் காலத்தில் புராணம், தூது இலக்கியங்கள் புதிய பொருள் பேசப் பயன்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக. *(15 புள்ளிகள்)*

7) மேல்வருவோருள் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
அ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
ஆ) சி. வை. தாமோதரம்பிள்ளை
இ) பேராசிரியர் ம. மு. உவைஷ்
ஈ) டானியல் *(15 புள்ளிகள்)*

agaram.lk

8) அ) (i) பின்வரும் வாக்கியத்தில் உள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு எழுதுக.
நாடுமுழுவதும் மோசமான எரிபொருள் பற்றாக்குறை நிலவுவதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.
(ii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
ஒவ்வொரு மனிதர்களும் சமூக நலனில் அக்கறை கொண்டிருத்தல் வேண்டும்.
(iii) ஆனால், ஆகவே, அல்லது ஆகிய இடைச்சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்திப் பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.
வானத்திப் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்தன
அவை தமக்கான இரையைக் கண்டு கொள்ளவில்லை
(iv) பின்வரும் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்துக் காட்டி, தனிவாக்கியங்களாக எழுதுக.
பிள்ளைகள் பாடங்களை கற்றுத் தெளிந்து கொள்ளவும் வாழ்க்கை முறையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழவும் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.
(v) பார், வை என்பன முதல்வினைகளாகவும் துணை வினைகளாகவும் வர வாக்கியங்கள் அமைக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
(i) அளபெடை
(ii) விளிவேற்றுமை
(iii) பொது வினை *(05 புள்ளிகள்)*
(10 + 5 = 15 புள்ளிகள்)